ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(அ) தேனி மாவட்டம், உத்தமபாளையம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் குடிநீரில் சாக்கடை நீர் கலந்ததால் ஏற்பட்ட பாதிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே நேரமில்லா நேரத்தில், நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் தந்திருப்பதாகச் சொல்லி, அந்தப் பிரச்சினையை இந்த அவையிலே சுட்டிக்காட்டினார்கள். அதற்கு நானும், அதற்குரிய விளக்கத்தை விசாரித்து இந்த அவையில் அறிவிப்பதாகச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

ஆகவே, தேனி மாவட்டம், உத்தமபாளையம், போடிநாயக்கனூர், கம்பம் ஆகிய பகுதிகளில், சுகாதாரமற்ற குடிநீரினால் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு, 12–5–2010 அன்று பவித்ரா என்ற ஒரு சிறுமி உயிரிழந்தது குறித்து, சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுக்கவேண்டுமென்று, அ.தி.மு.க.வின் சார்பிலே, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர், எதிர்க்கட்சியினுடைய கொறடா, திரு. ஆர்.டி. கணேசன், திரு. இ. மகேந்திரன் ஆகியோரும், அதேபோல, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த, ஆளும் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. கம்பம் நா. இராமகிருஷ்ணன் அவர்களும், திரு. ச. லட்சுமணன் அவர்களும், பேரவைத் தலைவரிடத்திலே முன்னறிப்பு தந்து, இப்போது என்னிடத்திலே அவை வழங்கப்பட்டிருக்கின்றன.

2010 மே 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

ஆகவே, காலையிலே நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் பேசியதற்குப் பிறகு, தேனி மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்களோடு தொலைபேசியிலே தொடர்புகொண்டு, பெறப்பட்டிருக்கக்கூடிய தகவலை நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

உத்தமபாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில், குடிநீரில் சாக்கடை நீர் கலந்ததாகவும், அதனால் வயிற்றுப்போக்கு ஏற்பட்டதாகத் தெரிவித்து நேற்றையதினம், 63 பேர் உத்தமபாளையம், சின்னமனூர், தேனி மருத்துவமனைகளிலே அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

முற்பகல் 11–55

அதில் 10 வயதுடைய சிறுமி பவித்ரா மரணமடைந்துள்ளார். எஞ்சிய நபர்கள் தீவிர மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர். வயிற்றுப் போக்கு கட்டுப்பாட்டில் இருக்கிறது. இன்றையதினம் 140 பேர் மருத்துவமனையிலே இருக்கிறார்கள். தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அந்தப் பகுதிக்கு மருத்துவர்கள் குழுவும் அனுப்பப்பட்டு எல்லாவித மருத்துவ வசதிகளும் இப்பொழுது அங்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

தேனி மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவரும் இதுவரையிலே அந்தப் பகுதியில் இருந்து இப்பணியினைக் கண்காணித்து வருகிறார். அனைத்து உயர்மட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளும் இப்பொழுது சுத்தம் செய்யப்பட்டிருக்கின்றன. அதைத் தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக குளோரின் கலக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

பெரியாறு அணையிலிருந்து 253 கன அடி நீர் திறந்து விடப்பட்டு சாக்கடை அடைப்புகள் சுத்தம் செய்யக்கூடிய பணி இப்போது வேகமாக நடைபெற்று வருகிறது. எனவே, நாளையிலிருந்து குடிநீர் வழங்கக்கூடிய பணியும் மேம்படுத்தப்படவிருக்கிறது. வயிற்றுப் போக்கு காரணமாக உயிரிழந்திருக்கக்கூடிய சிறுமி பவித்ராவினுடைய குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் இந்த அவைக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.